91

உ

சிவமயம்.

# ராத்ததீபிகை.

கலாநிதியந்திரசாலை
பருத்தித்துறை.

1933.

GF
.673x1:9
G3

உ

சிவமயம்.

# சிராத்ததீபிகை.

இது

அச்சுவேலி

பிரமஸ்ரீ. ச. குமாரசுவாமிக்குருக்கள்

அவர்களால்

பலநூல்களின் சாராம்சத்துடன்இயற்றி,

ஷெயார் புத்திரர்

வைத்தீசுவரசர்மா அவர்களால்

பருத்தித்துறை

கலாநிதியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

விலை சதம் 15.

ஸ்ரீமுகஞூ ஆனிமீ.

உ

சிவமயம்.

# சிறப்புப்பாயிரம்.

புலோலி

ஆரியதிராவிட மஹாபண்டிதர்

## பிரமஸ்ரீ. ம. முத்துக்குமாரசுவாமிக்குருக்கள்

அவர்கள் சொல்லியது.

உத்தமசற் குணநிலய னுயர்சீரச்சு வேலியில்வாழ்
வித்தகன்வே தாகமமுன் விளம்புபல கலைதெளிந்த
சித்தகுமார சுவாமிகுரு சிறந்தசிராத்த தீபிகையைப்
புத்தமுதிங் கிதுவென்னப் புகட்டினனிவ் வவனியர்க்கே.

# எம்மிடம் கிடைக்கும் புத்தகங்கள்.

க மாணிக்கவாசக சுவாமிகள் அருளிச்செய்த திருவெம்பாவை—திருப்பள்ளி யெழுச்சி—மூலமும் குறிப்புரையும், மாணிக்கவாசக சுவாமிகளுடைய திருவுருப் படமும் அமைக்கப்பட்டிருக்கிறது.

விலை அணா ஒன்று.

உ சிவார்ச்சனைத் திருமந்திரம்—திருநாவுக்கரசு சுவாமிகள் திருவாய்மலர்ந்தருளிய திருவாரூர்ப் போற்றித் திருத்தாண்டகம்—மூலமும் குறிப்புரைபும் கதைக்குறிப்பும், ஒவ்வொருவரும் பிரதிதினமும் காலையில் நியமத்துடன் பாராயணஞ்செய்யத்தக்கது.—விலை அணா ஒன்றுபை ஆறு.

ங ஆசார ஒழுக்க முறை:

உயர்ந்த கடிதம் .... ... அணா ஐந்து,
சாதாரணக் கடிதம் மாணவர்க்கு அணா மூன்று.

புத்தகங்கள் கிடைக்கும் இடங்கள்:—

க. பாலசுப்பிரமணிய நிலையம்,
இராயப்பேட்டை, சென்னை.

உ. சைவ சித்தாந்த நூற் பதிப்புக்கழகம்,
௩௱௪, இலிங்கச் செட்டி தெரு, சென்னை.

ங. சைவ சித்தாந்த நூற் பதிப்புக்கழகம்,
கீழரத வீதி, திருநெல்வேலி.

ச. ஞான சம்பந்த நிலையம்,
உஉ, பார்த்தசாரதி நாயுடு தெரு,
திருவல்லிக்கேணி...

சிவமயம்.

# சிராத்ததீபிகை.

ஆசாரியரிடம் தீக்ஷைபெற்றுத் தங்கள்தங்கள் அதிகாரத்துக்கு ஒத்ததாக அவ்வாசாரியராலே போதிக்கப்பட்ட சைவசமயாசாரங்களை வழுவற அநுட்டித்த மாணுக்கர்கள் போகத்தையும் மோக்ஷத்தையும் அடைவார்கள். [தீ-ஞானத்தைக்கொடுப்பது; க்ஷா-பாசத்தைபறுப்பது; எனவே பாசத்தை அறுத்து ஞானத்தைக்கொடுப்பது தீக்ஷையாகும்.] சைவசமயாசாரங்களை அநுட்டியாதவர்கள் புத்திதத்துவத்திலேயுள்ள பைசாசபுவனத்திலே பிசாசுகளாய் அங்குள்ள போகங்களை நூறு இருடி வருடம்வரையும் புசிப்பார்கள். தீக்ஷைபெற்றபின் ஆசாரத்திலே வழுவியபாவங்களுள் புத்திபூருவமாகச் செய்தபாவம் பிராயச்சித்தத்தினுல் நீங்கும். அபுத்திபூருவமாகச் செய்தபாவம் அந்தியேட்டி, பாஷாணத்தாபனம், உதகதானம், [தருப்பணம்] பிண்டதானம், அஸ்திசஞ்சயனம், நக்கினப்பிரச்சாதனம், ஏகோத்தரவிருத்தி, நவச்சிராத்தம், சங்கிதாசிராத்தம், இடபஉத்சர்ச்சனம், ஏகோத்திட்டம், பஞ்சதசசிராத்தம், சோதகும்பசிராத்தம், சபிண்டீகரணம் என்னும் இக்கிரியைகளாலே நீங்கும். இக்கிரியைகள் செய்யாதவிடத்து அப்பாவங்கள் புசித்தே தீரவேண்டும். சமயாசாரத்தில் வாஞ்சையுற்றும் பற்றற்றுமிருக்கும் நைட்டிகனும் சன்னியாசியும் சமயாசாரத்திலே சிலலோபம்வரின், அந்தியத்திற் பஞ்சாக்ஷரத்திலே பதிணுயிரம் உருச்செபிக்கவேண்டும். அன்றேல் ஒருசிவஞானிக்குப் பூசை செய்யவேண்டும்.

## சைவசமயநெறி.

சரித்தார்க்குச் சைவ சமய நெறியி
னுரித்தாங்கு புத்திமுத்தி யும்.

இந்தநெறி தன்னி லியங்கார் பிசாசாவ
ரந்தவினை போம்பரிகா ரத்து.

மரணசமயத்தில் தாம்செய்த பாபங்கணீங்கிச் சுகசுதிப்பேறெய்தவேண்டிக் கோதானமுதலியவற்றைப் பிராமணரை வரித்துச் செய்யவேண்டும். அல்லது இறக்கப்போகின்றவரைக் குறித்து அவர் புத்திராதிகளுஞ் செய்யலாம்.

சைவர்கள் இறந்தவழி அந்தியேட்டி செய்வித்துச், சிவரூபமான அவர்தேகத்தைச் சிவாக்கினியிற் சேர்த்தலாகிய சம்ஸ்காரஞ்செய்க. அந்தியேட்டியென்பது அந்தியத்திற்செய்யும் யாகம் எனப்பொருள்படும். [இஷ்டி-யாகம்] அந்தியேட்டிசெய்யின் சமயாசாரத்தில் வழுவியகுற்றந் தீருமுகத்தால் சிவத்துவசித்தி உண்டாகும். அத்தினத்திலேயே தகனமுடிவில் நக்கினப்பிரச்சாதனங் கொடுக்க. ஒருகுடத்தில் அரிசியைநிரப்பி அக்குடத்தைச்சுற்றி வஸ்திரங்கட்டி வெண்கலப்பாத்திரத்தால் மூடி அதில் நெய்யையூற்றி, பிராமணனுக்குப் பரமசிவனைத் தியானம்பண்ணிக்கொண்டு கொடுக்க. இது நக்கினப்பிரச்சாதனங் கொடுக்கும் முறையாகும். **காமிகாகமத்திலே** "தீக்ஷிதனாகிய இல்வாழ்வானுக்கு நக்கினப்பிரச்சாதனங் கொடுக்க. அது தகனமுடிவிலே இறந்தவனைச் சுட்டி வஸ்திரத்தோடும் அரிசியோடுங் கொடுக்கற்பாலது" எனக் கூறப்பட்டிருக்கின்றது.

## ஆசௌசதீபிகை.

மொழியவரு நக்கினத்தை மூடவருஞ் சிராத்த
முந்துதக ஞந்தத்தின் மரித்தவனைக் குறித்துப்
பழியினவ வத்திரமும் பச்சரிசி தானும்
பகர்ந்திடுநற் றக்கிணையு முதலான பொருள்கள்

அழிவில்சிவ தீக்கையுள வில்வாழ்வான் கைய
லளித்திடுக ... ... ... ... .

மதுபானம் மாமிசபோசனம் முதலிய துராசாரமுள்ளோரிறந்தவழி, அத்தேகத்தை அந்தியேஷ்டிசெய்து சிவாக்கினியாற்றகிக்க விதியின்மையால், அமந்திரமாகத்தகித்து, பின்னர் பிரதிகிருதிதேகத்தை அந்தியேஷ்டிசெய்து சிவாக்கினியாற்றகித்தே மற்றுங்கிரியைகள்செய்யவேண்டியது முறையாம். முன்பு கோதானம்முதலிய தானங்களைச்செய்யாவிடின் பிரதிதேகத்தில் ஆத்மயோசனஞ்செய்யுங்காலத்து அத்தானங்களைச்செய்து பின்பு தகனாதிகளைச்செய்யலாம்.

அந்தியேட்டி முற்றியபின் பாஷாணத்தாபனஞ்செய்க. [பாஷாணம்—கல்லு] சாதகன் ஆசாரியனுமிவர்களுக்கு சாதிநாமத்தாலும், சமயி புத்திரகன் இவர்களுக்குக் கந்தாதிநாமத்தாலும் மும்மூன்று தருப்பணமுஞ்செய்க. பிண்டப்பிரதானமும் ஏகோத்தரவிருத்தியும்புரிக. இரண்டாநாள்முதலாக ஆசௌசம்முடியுமளவும் தினம் ஒருதருப்பணம் விருத்தியாகச்செய்க. ஏகோத்தரவிருத்திதருப்பணம் பிராமணருக்கு எழுபத்தைந்தும், க்ஷத்திரியருக்கு நூற்றிரண்டும், வைசியருக்கு நூற்றைம்பதும், சூத்திரருக்கு ஐஞ்ஞூற்றிருபத்தைந்துமாம். தருப்பணத்தொகையினளவு ஏகோத்தரவிருத்திசிராத்தம் அவ்வத்தினங்களிற்செய்க. பிண்டப்பிரதானம் நான்குவருணத்தாருக்கும் ஒவ்வொருநாளுக்கு ஒவ்வொன்றாக ஆசௌசமுடிவளவுங்கொடுக்க. பிராமணர் பத்துப்பிண்டமும், க்ஷத்திரியர் பன்னிரண்டுபிண்டமும், வைசியர் பதினைந்துபிண்டமும், சூத்திரர் முப்பதுபிண்டமும் இடுக. முதலாநாள், மூன்றாநாள், ஐந்தாநாள், ஏழாநாள், ஒன்பதாநாள், பதினொராநாள் ஆகிய இந்நாட்களில் சற்பாத்திரரைவரித்து, தூபம் தீபம் சந்தனம் முதலியனவின்றிப் பொருள்களைக்கொடுப்பது நவச்சிராத்தமாம். நவம்—புதிது; எனவே முத

விற்செய்யுஞ் சிராத்தம் என்பதுகருத்து. பாஷாணபிண்டமி டுதலால் உருவஅமைப்பு உண்டாகும். ஏகோத்தரவிருத்தி தருப்பணம் என்னும் இவற்றால் இறந்தவர்களுக்குப் பசி தாகம் வெப்புத்தீரும். நவச்சிராத்தத்தால் பிரேதத்தன்மை நீங்கும். (பசி தாகங்களாலுண்டாகும் அதிகமான துக்கத்தை அனுபவிப்பதே பிரேதத்துவமாம்.) முதலாம் மூன்றும் ஐந் தாம் ஏழாம் ஒன்பதாம்நாளுள் ஒன்றனுள் அத்திசஞ்சயன ஞ்செய்க. அத்திசஞ்சயனம்—எலும்புபொறுக்குதல், ஆ சௌசமுடிவான தினத்திலே பாஷாணத்தை உத்தியாபனஞ் செய்து, வாத்தியஒலியுடன் தீர்த்தத்திலிட்டு ஸ்நானஞ்செய் க. இதனாற் புண்ணியதீர்த்தத்தில் மூழ்கியபலனுண்டாம்.

கபிலமுனிவருடைய விழித்தீயினால் சகரபுத்திரர் அறுபதினாயிரர் பாதாளத்தில் உடம்பு சாம்பராய் நரகத்துன் பமனுபவித்தனர். கங்காதீர்த்தத்தை அவர்கள் எலும்பிற் பாயச்செய்து நற்கதியடைவிக்கவிரும்பிய அவர்கள்வழித்தோ ன்றலான பகீரதமகாராசன் அநேககாலம் சிவனைநோக்கித் தவமியற்றினான். சிவபெருமானுடைய உத்தரவினால், பிரம லோகத்திருந்தகங்கை வேகமாய்ப்பாய்ந்துவந்தது, கடவுள் அதைத் தமது திருமுடியிற்றாங்கி, சிறுதுளியைவிடுத்தனர். அது பாதாளத்திற்சென்று, அவர்கள்எலும்பிற் பாய்ந்தது. அவ்விசேடத்தால் அவர்கள் நற்கதியடைந்தார்கள். இச் சரி த்திரத்தாலும் அஸ்தியைப் புண்ணியதீர்த்தத்திலிடுவதனால் ஆன்மா புண்ணியலோகம்அடையும் என்பது நன்குதேறப் படும்.

வைதிகர்களுஞ் சைவர்களும் ஏகோத்திட்டத்தின்மு ன் பரமசிவனுக்கு நீலஇடபம்விடுதலாகிய இடபோத்சர்ச்ச னம் என்னும் கிரியையைச்செய்க. மற்றும் சிராத்தங்களனை த்துஞ் செய்தாலுஞ் சிவபெருமானைக்குறித்து இடபம்விடா ராயின் பிசாசுருவம் அகலாது. ஆதலால் சிராத்தங்கள்அனை த்துஞ்செய்து இடபோத்சர்ச்சனமுஞ்செய்க.

## ஆசௌசதீபிகை.

தேசமிசை யிருவர்களு மேகோதிட் டத்திற்
சிவனுக்கு விதிப்படியே நீலவிடை விடுக
ஆசகலுஞ் சிராத்தங்க ளனைத்துஞ்செய் தாலு
மவ்விடபம் விட்டிலரேற் பிசாசுருவ மகலா
தேசிலாச் சிராத்தங்க ளென்பவையுஞ் செய்தே
யெழிலேறும் விடக்கடவ னீசானுக் கன்பால்.

நீலவிடையாவது உடம்பு சிவப்பும் முகமும் முதுகும் சாம்பல்நிறமும் குளம்புங்கொம்பும் வெண்மைநிறமுமாகவுள்ள இடபமாம். நீலவிடைவிடும்முறை வைத்தியநாத தீக்ஷிதீயத்திலும் விரிவாகக்கூறப்பட்டிருக்கின்றது. (நேத்திரமொழிந்த சங்கிதாமந்திரங்களைப்பத்துச்சற்பாத்திரரிடம் ஆவாகித்து அவர்களுக்குத்தானஞ்செய்வது சங்கிதாசிராத்தம் எனப்படும். சங்கிதாசிராத்தஞ்செய்வதால் தீக்கைபெற்றபின் ஆசாரத்தில்வந்தலோபம் நிவிர்த்தியாகும். பின்னர் ஏகோத்திட்டத்தையும்பஞ்சதச [பதினைந்து]சிராத்தத்தையுஞ்செய்க. ஒருவரை வரித்துச் செய்வதுஏகோத்திட்டமாம். இது ஆத்யசிராத்தம் என்றுஞ் சொல்லப்படும். விசுவதேவவரணம் பிதிர்சப்தம் விகிரம் பிரதக்ஷிணம் முதலியன ஏகோத்திட்டத்தில் இல்லை என அறிக. ஏகோத்திட்டம் மாசிகம் இவற்றால் பிசாசத்துவ நிவிர்த்தி உண்டாகும். ஏகோத்திட்டத்துக்கு அடுத்தநாளிலே பிதிர்தேவரோடு இறந்தவரைச்சம்யோசித்தலாகிய சபிண்டீகரணஞ்செய்க.

சபிண்டீகரணஞ் செய்தலால் ஆன்மா பிரேதத்தன்மைநீங்கிச்சிவலோகம் அடைதலாம்.

முக்கியகருத்தா ஓராண்டுவரை சோதகும்பசிராத்தஞ்செய்க. சோதகும்பசிராத்தஞ் செய்தலால் பிரேதத்துக்குரிய பசி தாகம் தீரும். சபிண்டீகரணஞ்செய்தபின்னர் ஆவிருத்தியாக விதிக்கப்படும். அவ்வக்காலங்களில் மாசிக சிராத்தங்களைச்செய்க. மரித்தநாள்முதலான இருபத்தேழாம் நா

ள்முதல்மூன்று நாளுளொன்றில் ஊனமாசிகம்செய்க. இரண்டாமாசந்தொடங்கி மாசந்தோறும் மரித்ததிதியில் பதினொருமாசிகஞ்செய்க. நாற்பதாம்நாள்முதல் நாற்பத்தைந்துக்குள் திரைபக்ஷமாசிகஞ்செய்க. நூற்றெழுபதாம்நாள்முதல் நூற்றெண்பதுநாட்களுக்குள் ஊனஷாண்மாசிகஞ்செய்க. முந்நூற்றைம்பத்தைந்தாநாளுள் ஊனாப்திகமாசிகஞ்செய்க. ஊனமாசிகம், திரைபக்கமாசிகம், ஊனஷாண்மாசிகம், ஊனாப்திகமாசிகம், இவற்றைத்திதி வார நக்ஷத்திரம்பரீக்ஷித்து ஒருதினத்திற்செய்க. முக்கியகருத்தா அட்டகைமுதலிய சிவசிராத்தங்களையும் வருடாந்தத்தில், இறந்தஅத்திதியிலே ஆப்திகமாகியசிராத்தத்தையுஞ்செய்க. [அட்டகையின் இலக்கணம் முன்னர்க்கூறப்படும்.] இறந்தமாதமுந்திதியும் வருஷந்தோறும் வரும்பொழுதும் விசுவாசத்தோடுவிதிப்படிசிராத்தஞ்செய்க.

## ஆசௌசதீபிகை.

செய்துநிறை வேறியபின் சேர்வருடாந் தத்திற்
றிவச மெழில் பெறச் செய்வான்.

## காஞ்சிப்புராணம்.

இருமுது குரவ ரிறந்திடு மதிநா ளாண்டுதோ றெய்துழி யுகாதி, வருமனு வாதி யுவாமுதற் றினத்தின் வயங்குதென் புலத்தவர்க் குறித்துத், திருமறை யவர்க்கு முறையினூட் டிடுக.

அந்தியேட்டியோடுகூடிய அபரக்கிரியைகளெல்லாம் இறந்தவர் சிவத்தன்மையடைதற்கு ஏதுவாயிருத்தலினால் பிதாமாதா முதலாயினோருக்குப் புத்திரர்முதலாயினோர் சிரத்தையோடுதவறாது உலோபமின்றித் தம்பொருளளவுக்கேற்ப அபரக்கிரியைகளைச்செய்தல் முறையாம். [அபரம்-பிந்தியது; இறந்தபின்செய்வது அபரக்கிரியையாம்.] தந்தை தாயர் உயிரோடிருக்கும்பொழுது அவருக்குவேண்டுவன செய்துவழிபடுதலும் அவர்இறந்தபின்னர்ச் சிரத்தையோடு உ

லோபமின்றித் தம் பொருளளவுக்கேற்ப உத்தரக்கிரியைக ளைச்செய்து வழிபடுதலும் புத்திரர்களுக்குக் கடனும். இ தை அறிவுறுத்துவதற்காகவே ஔவையார் "தந்தைதாய் பேண்" என்றருளிச்செய்தார். சிலர் தமது தாய்தந்தையர் உயிரோடிருக்கும்பொழுது அவரைப்பேணுது, இறந்தபின் உலகத்தார் மெச்சும்பொருட்டு அபரக்கிரியைகளை வெகுதிர வியஞ்செலவிட்டுச் செய்கிறுர்கள். இச்செயலால் வரும்ப யன்யாது? அபரக்கிரியைகளைச் சிறிதுபொருள் செலவிட் டுஞ்செய்யலாம். அதற்குச்சிரத்தையே முக்கியம். சிரத்தை யோடு ஓமாதிகள்செய்து பிதாமுதலானவர்களை உத்தேசித் துச் சற்பாத்திரப் பிராமணர்களுக்குப் போசனம் முதலிய வைகளைக் கொடுப்பது சிராத்தம் எனப்படும். [சிராத்தம்-சிர த்தையோடு செய்யப்படுவது.] சிரத்தையின்றிப் பிறவிடங் களிலே மனத்தைச்செலுத்திச் செய்யப்படுவது சிராத்தமா காது.

கிருகஸ்தனுனவன் பிரமயஞ்ஞம், தேவயஞ்ஞம், பி திர்யஞ்ஞம், பூதயஞ்ஞம், மானுடயஞ்ஞம் என்னும் பஞ்சம காயஞ்ஞங்களையுஞ் செய்தல்வேண்டும். [பஞ்சமகாயஞ்ஞம்- ஐம்பெருவேள்வி.] அவைகளுள்ளே பிரமயஞ்ஞமாவது வே தமோதலாம். வேதமோதுதலினுலே இருடிகள்திருப்தியா கின்றனர். தேவயஞ்ஞமாவது தேவர்களுக்கு அக்கினியிலே ஓமஞ்செய்தலாம். ஓமஞ்செய்தலால் தேவர்கள் திருப்தியா கின்றனர். பிதிர்யஞ்ஞமாவது சிராத்தம் பிதிர்தருப்பணஞ் செய்தலாம். சிராத்ததருப்பணத்தால் பிதிர்கள் திருப்தியா கின்றனர். பூதயஞ்ஞமாவது பூதங்களுக்குப் பலியன்னமிடு தலாம். அது வாயசபலிமுதலியன. பலியிடுவதனுல் பூதங் கள் திருப்தியாகின்றன. மானுடயஞ்ஞமாவது அதிதிகளு க்கு அன்னங்கொடுத்தலாம். போசனத்தால் அதிதிகள் திருப்தியடைகின்றனர். [அதிதி-முன்னொருகாலத்தும் அறி யப்படாத பரதேசி.] கிருகஸ்தனுற் செய்யப்படுந் தென்புல

த்தார்வழிபாடு, தெய்வந்தொழுதல் விருந்தோம்பல்முதலிய தருமங்களுளெல்லாம் சிராத்தம் தருப்பணஞ்செய்தலாகிய தென்புலத்தார்வழிபாடே அவனுக்கு இன்றியமையாத சிறப்புவழிபாடாம். பிரமதேவரது திருவவதாரமாய்விளங்கிய திருவள்ளுவநாயனுர் உத்தரவேதத்திலே,

தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்க லானென்றாங்
கைம்புலத்தா றோம்ப றலை.

என்னுங்குறளிலே தென்புலத்தாரை முதற்கண்வைத்து இதனைத் தெரித்தருளினர். அன்புண்டாகும்படி தென்புலத்தார் முதலாயினோருக்குக்கொடாது தான்மாத்திரம் உண்ணும் உணவு மிக்கஇழிவுள்ளது என்னுங்கருத்தமைய,

தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்க லென்றிவரோ
டின்புறத்தா னுண்ட வினிதாமே—அன்புறவே
தக்கவரை யின்றித் தனித்துண்ட ரூன்கவர்மீன்
கொக்கருந்த லென்றே குறி.

என்று நீதிவெண்பாவிற் கூறப்பட்டிருக்கின்றது.

தெய்வயாகம் பிதிர்யாகம் முதலிய ஐவகையாகத்திற்றனக்கியன்றதொன்றைச் செய்யாது புசித்தோனும், பதிவிரதையை ஆசைப்பட்டவனும், பதிவிரதையாகிய தனது பாரியைவிட்டுப் பொதுமடவாரைக் கூடுபவனும் முட்பன்றியாய்ப் பிறப்பான் என்று சுப்பிரமணியக்கடவுள் அகத்தியமுனிவருக்குச் செவிஅறிவுறுத்தியருளிய சிவதருமோத்தரஞ் செப்புகின்றது. இதனுல் பதிவிரதையை ஆசைப்படுதல் பொதுமடவாரைக்கூடுதல்போலப் பஞ்சமகாயஞ்ஞத்துள் இயன்றதொன்றைச்செய்யாது புசித்தலுங் குற்றமாமென்பது பெறப்பட்டது.

தந்தைதாயர் தீவினைதேய்தற்பொருட்டு அவரை நோக்கிப் புதல்வர்செய்யும் சிராத்தம்முதலிய தானதருமங்கள் அவரைச்சென்றடைதலால், திருவள்ளுவநாயனுர்—

எழுபிறப்புந் தீயவை தீண்டா பழிபிறங்காப்
பண்புடை மக்கட் பெறின். எனவும்,

தம்பொரு ளென்பதம் மக்க ளவர்பொரு
டந்தம் வினையான் வரும். எனவும் ஓதியருளினர்.

இக்குறள்வெண்பாக்களினாலும் புத்திரராயினோர் தந்தை தாய்முதலிய இறந்த பிதிரர்பொருட்டு நித்தியர்களாகிய பிதிர்தேவர்களுக்குச் சிராத்தம்முதலிய தருமங்களைச்செய்யுங்கடமையுடையவர் என்பதை விளக்கியருளினர். இவ்வுண்மைகளையெல்லாம்,

மைந்த ரைப்பெறு கின்றது மாசிலாப்
புந்தி யன்பொடு போற்றி வளர்ப்பதுந்
தந்தை மாண்டுழித் தம்முறைக் கேற்றிட
வந்த மில்கட னாற்றுதற் கேயன்றே.

எனக் கந்தபுராணத்திலும்,

ஆங்கதன் பின்னர்க் காம மறம்பொருட் பேற்றி னோடு
மோங்குசீர்ப் பிதிரர் வானோர் கடன்களி னொழிவும் வேண்டி
மாங்குயிற் கிளவி மென்றோண் மனைவியை மணப்பர்.

எனக் காஞ்சிப்புராணத்திலுப்,

வாசந்திபேசி மணம்புணர்ந்தப்பதி
நேசந்தெவிட்டி நினைப்பொழிவார்பின்னை
யாசந்திமேல்வைத் தமையவழுதிட்டுப்
பாசந்திசுட்டுப் பலியட்டினார்களே.

எனத் திருமந்திரத்தும்,

மூன்று கடன்கழித்த பார்ப்பானு மோர்ந்து
முறைநிலை கோடா வரசுஞ்—சிறைநின்
றலவலை யில்லாக் குடியுமிம் மூவ
ருலக மெனப்படுவார்.

[மூவர்கடன்:—தேவர்கடன்; பிதிரர்கடன்; முனிவர்கடன்.]

எனத் திரிகடுகத்திலும்,

ஆவு மானியற் பார்ப்பன மாக்களும்
பெண்டிரும் பிணியுடை யீரும் பேணித்
தென்புல வாழ்நர்க் கருங்கட னிறுக்கும்
பொன்போற் புதல்வர்ப் பெறாஅ தீரும்
எம்மம்பு கடிவிடுது நும்மரண் சேர்மின்என
அறத்தாறு நுவலும் பூட்கை மறத்திறன்

எனப் புறநானூற்றிலும்,

தெய்வம் அதிதி வேலைக்காரர் பிதிரர் தான்என்னும் ஐந்து இடத்துக்கும் எவன் திருப்திசெய்யவில்லையோ அவன் சுவாசம்விடினும் உயிர்உள்ளவனல்லன் என மநுதருமசாத்திரத்திலும் கூறப்பட்டவாற்றானும் உணர்ந்துகொள்க.

புத்திரர்செய்யும் தானம்முதலிய தருமங்களின்பலன் தந்தைதாயரைச்சென்றடையுமென்பது மேல்வருஞ் சரித்திரத்தாலும் நன்கு உணரப்படும்.

அங்கதேசத்தரசனுக்கு மந்திரியாயிருந்த ஒருவன் பொருளாசைமிகுதியினாலே தருமத்தைச்செய்யாதாயினான். அவன் இறந்தபின் நரகத்திற்கிடந்து வருந்தினான். நாரதமுனிவர் அவனுடைய புத்திரனாகிய அசித்தன்என்பவனை அடைந்து, தருமத்தைச்செய்யும்படி உபதேசித்தார். அசித்தன் தன் தகப்பன் தூணடியிற்புதைத்த புதையலைஎடுத்துத் தருமங்கள்செய்தான். அதனால் அவன்றந்தை நரகத்தைநீங்கிச் சுவர்க்கமடைந்தான். பின்னரவன் சிவத்துரோகஞ் செய்தமையால் அவன்றந்தை மீண்டும் நரகமடைந்தனன் என்றிங்ஙனமாக உபதேசகாண்டத்திற் கூறப்பட்டிருக்கின்றது.

ஆன்றோர்,

பெற்றாள் வளர்த்தாள் பெயரிட்டாள் பெற்றபிள்ளை
பித்தானா லென்செய்வாள் பின்.

எனக்கூறியதூஉம், அன்னைதந்தையருடைய கடன்களைச்செய்யாத பிள்ளைகளும் அவர்களைப்பெற்ற அன்னைதந்தையரும் பயனையிழந்தனர் என்பதைநோக்கியேயென்று உணர்க.

மகன்றந்தைக் காற்று முதவி யிவன்றந்தை
யென்னோற்றான் கொல்லெனுஞ் சொல்.

எனவருவதூஉங் கண்டுகொள்க.

பிதிர்களுக்குச் சிராத்தஞ்செய்பவர்கள் தீர்க்கஆயுளையும் சுகத்தையும் நற்சந்ததியையும் சிவபெருமானுடைய கிருபையையும் அடைவார்கள். அவர்களுக்குத் தீவினையும் வறுமையும் இடரும்நீங்கும். அரசனாகிய பாண்டுஎன்பான்,

மென்பாலகரைப்பயவாதவர் மெய்ம்மையாகத்
தென்பாலவர்தம்பசித்தீநனி தீர்க்கமாட்டார்.

எனக் கூறியதாகப் பாரதத்திற் சொல்லப்பட்டிருக்கின்றது.

மனுவமிசத்திலே தோன்றிய செங்கோன்மன்னனாகிய திலீபன் புத்திரப்பேறின்மையால் வருந்தித் தனது குலகுருவாகிய வசிட்டமகாமுனிவரை அடைந்து பணிந்து, பகைவர் அஞ்சத்தக்க முயற்சியின்வலியுடையேனாகிய யான் புதல்வர்இல்லாமையினாலே எமது முன்னோராய் முன்னாளிற் பிறந்திறந்தவர்களாகிய அப்பிதிரர்க்குக்கொடுக்கும் பிண்டமிடுதல் தருப்பணஞ்செய்தல் முதலியகடன்கள் பந்திப்ப அதனால்வருந்துகின்றேன் என்று தனதுகுறையை விண்ணப்பஞ்செய்தான் எனவும், திலீபனுடைய புத்திரனாகிய இரகு, யோகமார்க்கத்தினாலே தேகத்தைவிட்டு முத்தியடைந்தபொழுது, அவன் புத்திரனாகிய அஜகுமாரன் நிட்டையிலிருந்து இறந்தோருக்குச்செய்யும் விதியைச் சந்நியாசிகளாற் செய்வித்துப் பின்னர்ப் பிதிர்பக்தியினால் அந்த இரகுவுக்குத் திலோதகபிண்டதானாதிகளைச் செய்தான்எனவும் இரகுவமிசம் செப்புகின்றது.

தசரதராசன் இறந்தபின்பு அவன்மகனாகிய பரதன் என்பான் அபரச்சடங்குகள் முழுதையும் பிழையறச்செய்த

மையும், சடாயு உயிர்நீத்தபின் அச்சடாயுவுக்கு ஸ்ரீ ராம பிரான் அந்தியக்கிரியைகளை மிக்க சிரத்தையோடுசெய்தமை யும் இராமோதந்தம் இராமாயணம் முதலிய நூல்களால் நன் குபுலப்படுகின்றன.

தவசிரேட்டராய்விளங்கிய குச்சகமுனிவர் தமதுபுத் திரராகிய மிருககண்டுயரை நோக்கி, புத்திரனே! நீ இறந்த மேலவருடைய துன்பத்தையும் நரகமடைதலையும் நீக்கும் வண்ணம் புதல்வரைப்பெறும்பொருட்டு மணஞ்செய்யவே ண்டும். புத்திரன் என்னுஞ்சொல்லின் பொருளை மறந்தாய் போலும்; துறந்தவருக்கு உணவுமுதலியன கொடுத்து இற ந்தவர்களுக்குத் தீக்கடன் நீர்க்கடன்களைச்செய்து, பலதரு மங்களை ஆற்றி விருந்தோம்பும் இல்லறமன்றி மானுடப்பி றவியாலாகும் பேருதவியாது என்று உபதேசித்தார் எனக் கந்தபுராணம் கூறுவதை யாவர்தாம் மறுப்பர்.

## கந்தபுராணம்.

..........................................இறந்தமேலோர்
துன்பமுநிரயஞ்சேர்வுந்துடைத்திடுந்தொன்மைநோக்கி
யன்புறுபுதல்வர்க்காகவரிவையைக்கோடியையா.

சித்திரமிலகுசெவ்வாய்ச்சிறடிச்சிறுவர்தம்மைப்
புத்திரரென்னுஞ்சொற்குப்பொருணிலையயர்த்திபோலாம்.

[புத்திரர்—புத் என்னும் நரகத்தைநீக்கிப் பிதிரரைக்காக்கின்றவர்.]

துறந்தவர்கள்வேண்டியதொர்துப்புரவுநல்கி
யிறந்தவர்கள்காமுறுமிருங்கடனியற்றி
யறம்பலவுமாற்றிவிருந்தோம்புமுறையல்லாற்
பிறந்தநெறியாலுளதொர்பேருதவியாதோ.

பிதிரர்பொருட்டு ஓமம் பிண்டதானம் தருப்பணம் முதலியவைகளைக் கைமறித்துச்செய்வானாகிய புத்திரனையு டையவனே பெரிய சுவர்க்கத்தையடைவானென்று மத்தியந் தமுனிவர் தமது புத்திரராகிய வியாக்கிரபாதமுனிவருக்குக்

கூறினர் என்று தில்லைவாழந்தணரும் சந்தானசாரியருமாகிய உமாபதிசிவாசாரியர் கோயிற்புராணத்தில் திருவாய்மலர்ந்தருளியிருக்கின்றனர்.

புகழனரும், அவரது துணைவியாராகிய மாதினியாரும் இறந்தபின், அவர்கள் பிள்ளைகளாகிய திலகவதியாரும் மருணீக்கியாரும் அவர்களுக்குச்செய்யும் அந்தியகருமங்களைக் குறைவின்றி முடித்தார்கள் என்று பெரியபுராணம் நவிலுகின்றது.

புலவராயினும், ஞானிகளாயினும், மூடர்களாயினும், பெண்களாயினும், பிரமசாரியாயினும், அரசராயினும் பிதா மாதா முதலாயினோருக்குச் சிராத்தத்தைச் செய்யாதொழிந்தால், கோடிசனனத்திற் சண்டாளராவார்கள்.

சனனசௌச மரணசௌசத்திலேசிராத்தம்வந்தால், ஆசௌசநிவிர்த்தியாகுந் தினத்திலே சிராத்தஞ் செய்தல் வேண்டும். விதவை தான் வீட்டுக்குவிலக்காயிருக்கும்போது தன் கணவனுடைய சிராத்ததினம்வந்தால் ஐந்தாநாள் சிராத்தஞ்செய்பக்கடவள். ஒருவன் இறந்தமாதம்தெரியாமல் தினம்மாத்திரந்தெரிந்தால் ஆடிமாதத்திலாவது மாசிமாதத்திலாவது மார்கழியிலாவது புரட்டாதியிலாவது அத்தினத்திற் சிராத்தஞ்செய்க. இறந்தநாள்தெரியாது மாசந்தெரிந்தால் அம்மாசத்து அமாவாசையிற்செய்க. அல்லது கிருஷ்ணஅட்டமியிற்செய்க. பக்ஷம்தெரியாவிடின் கிருஷ்ணபக்ஷத்திற்செய்க. மரித்தமாதம் திதி பக்ஷம் இவைகளுள் ஒன்றுந்தெரியாவிடின் மரித்ததாகக் கேள்விப்பட்டமாதத்து அமாவாசையிற்செய்க. தாய் தகப்பன் இருவருக்கும் ஒரேநாளிற் சிராத்தம்வந்தால் ஒன்றாகப் பாகஞ்செய்து இருசிராத்தங்களையுஞ்செய்க. சிராத்தத்துக்குப் பாகஞ்செய்யத்தொடங்கியபின் ஆசௌசம்வரின், அச் சிராத்தம்முடியும்வரையும் அது கர்த்தாவைப்பற்றாது. பிரமசாரி தன் பிதா மாதா அல்லா

தாருக்குத் தகனுதி கிரியைகளைச்செய்தல்கூடாது. செய்யின் மீட்டும் உபநயனஞ் செய்துகொள்ளக்கடவன். தத்தபுத்திரன் பார்வணம் மாசிகம் பிண்டதானம் இவைகளைச்செய்தலாகும். சிஷ்யர் தமதுகுரு சிவபதமடைந்தமாச நக்ஷத்திரத்திலாயினும் திதியிலாயினும் அவரைக்குறித்து வருடந்தோறுந் தவருது குருபூசை செய்துவருதல்வேண்டும்.

சிராத்ததினத்தில், திருக்கோயிலிலே கடவுளுக்குத் தன்னுலியன்றவரை அபிடேகம் பூசை திருவிளக்கேற்றுதல் முதலியவைகளைச் செய்தல்வேண்டும். "யாவர்க்குமாம் பசுவிற்கொருவாயுறை" என்னும் திருவாக்கைக் கடைப்பிடித்துப் பசுக்களுக்குப் புல்லுப்போடுதல்வேண்டும்.

சிராத்தநடக்குந்தினத்திலே செய்யத்தகாத கருமங்கள்:- நெற்குத்தல், பிச்சையிடுதல், தயிர்கடைதல், நெய் முதலியபொருட்களை வாங்கல், கொடுத்தல் என்பனவாம். சமசாதி அல்லாதவர்களும், சிவதீக்கைபெருதவர்களும், நித்தியகருமம்விடுத்தவர்களும், சுசியற்றவர்களும், சிராத்தத்துக்கு உபயோகமானவைகளைச் சிராத்தம்நிறைவேறுதற்குமுன்பு புசிக்கநினைப்பவர்களும், பாகஞ்செய்யும்பொழுது வெற்றிலைபாக்குண்பவர்களும் ஆகிய இவர்களாலே சமைக்கப்பட்டவை பிதிர்களுக்குப் பிரீதியாகா. இராக்ஷதருக்கே பிரீதியாகும். சிராத்தத்திலே கண்ணீர்விடுதலும், கோபித்தலும், துரிதஞ்செய்தலும், பொய்சொல்லலும், சிந்தியஅன்னத்தைக்காலால்மிதித்தலும், இலையில் அன்னத்தைத்தூவிப்பரிமாறலும் ஆகாவாம். கண்ணீருடன் செய்யின் பிரேதங்களையும், கோபத்துடன்செய்யின் சத்துருக்களையும், பொய்சொல்லிச்செய்யின் நாய்களையும், அன்னத்தைமிதித்துச்செய்யின் இராக்ஷதர்களையும், தூவிப்பரிமாறின் பாவிகளையும் அச்சிராத்தபலன் அடைகின்றது.

சிராத்தத்துக்குரியதிரவியங்கள்:- எள்ளு, நெல்லரிசி, கோதுமை, சிறுபயறு, உழுந்து, சர்க்கரை, தேன், பசுநெய்,

பசுப்பால், பசுத்தயிர், எண்ணெய், சிகைக்காய், உப்பு, புளி, மிளகு, சீரகம், மஞ்சல், இஞ்சிக்கிழங்கு, வாழையிலை, வாழைத்தண்டு, வாழைக்காய், வாழைப்பழம், மாங்காய், மாம்பழம், பலாக்காய், பலாப்பழம், தேங்காய், இளநீர், புடலங்காய், அவரைக்காய், பாகற்காய், எலுமிச்சம்பழம், நெல்லிக்காய், சிறுகிழங்கு, வள்ளிக்கிழங்கு, கீரை, முல்லையிலை, முசுட்டையிலை, காரையிலை, பிரண்டை, கருவேப்பிலை, வெற்றிலை பாக்கு, சுக்கு, கிராம்பு, சாதிக்காய் முதலியவைகளாம்.

சிராத்தத்துக்கு ஆகாததிரவியங்கள்:- கடலை, பீர்க்கங்காய், பூசனிக்காய், கத்தரிக்காய், அத்திக்காய், முருங்கைக்காய், வாழைப்பூ, வெண்காயம், வெள்ளைப்பூண்டு, கொவ்வை, எருமைப்பால், எருமைத்தயிர், ஆட்டுப்பால், ஆட்டுத்தயிர், முதலியவைகளாம்.

சிராத்தத்துக்குபயோகமாகும் பத்திரபுஷ்பங்கள்:— துளசி, வில்வம், தாமரை, சண்பகம், அறுகு, புன்னை, நந்தியாவர்த்தை, எட்பூ, மருக்கொழுந்து, வெட்டிவேர் முதலியவைகளாம்.

சிராத்தத்துக்கு உபயோகமாகாத புஷ்பங்கள்:— மகிழம்பூ, தாழம்பூ, அலரிப்பூ, சிறுசண்பகப்பூ முதலியவைகளாம். இவற்றிற்குப்பிரமாணம் காரணம்முதலிய ஆகமங்களிலும், அகோரசிவாசாரியர் பத்ததிவியாக்கியானத்திலும், மிருதிகளிலும்காண்க.

தன்வீட்டிலாயினும், திருநந்தனவனத்திலாயினும், மலையிலாயினும், புண்ணியதீர்த்தக்கரையிலாயினும், திருக்கோயிலிலாயினும், குருவின்மனையிலாயினும், கோமயத்தினாலே சுத்திசெய்யப்பட்ட இடத்திலே சிராத்தஞ் செய்யலாம். பிராமணர் முதலிய முதன்மூன்று வருணத்தாருள்ளும் உபநயனமாத்திரம்பெற்றாருக்கு வைதிகக்கிரியைகள் மாத்திரமு

செய்யத்தக்கன. உபநயனத்தோடு சிவதீக்ஷையும் பெற்றவருக்கு வைதிகக்கிரியைகளும் ஆகமக்கிரியைகளும் விரவிச்செய்யத்தக்கன. ஆகமக்கிரியைகள் செய்யாவிடின், அவர்பெற்ற சிவதீக்ஷையினாலே ஒரு சிறிதும் பயனில்லை. சிவதீக்ஷைபெற்ற சூத்திரருக்கும் அநுலோமருக்கும் ஆகமக்கிரியைகள் செய்யத்தக்கன. சிவதீக்ஷைபெறாதவருக்குப் பிரணவமின்றி நமோந்தமாகிய தேவதோத்திரங்களைக்கொண்டு கிரியைகள் செய்யத்தக்கன. வைதிகத்தையும் ஆகமத்தையுஞ் செய்யவேண்டும் என்று வைத்தியநாததீக்ஷிதீயமும் கூறுகின்றது.

## திருவானைக்காப்புராணம்.

மறையவர் முதன்மூவர்க்குந் தீக்கையுண்டேன்
வைதிகம்தாந்திரம்விரவி வகுத்தலாகு
மறைதருதாந் திரமொன்றாற் புரிதருநு
மமையுமருட் டீக்கையில தாயின்வேத
முறையுளிச்செய் திடன்முறையாம் பின்னேன்றீக்கை
முற்றினனே லாகமத்தான் முடித்தலேயா
நிறைதருதாந் திரத்தியற்று ராயிற்றீக்கை
நெடும்பயனின் றாந்தீக்கை நிகழ்ந்துளார்க்கே.

பிராதக்காலம், சங்கவகாலம், மத்தியானகாலம், அபரான்னகாலம், சாயான்னகாலம் என்பகற்காலம்ஐந்துகூறாக வகுக்கப்படும். சூரியஉதயம் முதல் ஆறுநாழிகை வரையும் பிராதக்காலமாம். அதற்குமேற் பன்னிரண்டு நாழிகைவரையும் சங்கவகாலமாம். அதற்குமேற் பதினெட்டு நாழிகைவரையும் மத்தியானகாலமாம். அதற்குமேல் இருபத்துநான்குநாழிகைவரையும் அபரான்னகாலமாம். அதற்குமேல் முப்பதுநாழிகைவரையும் சாயான்னகாலமாம். சிராத்தம் இராத்திரிகாலத்திலும், பிராதக்காலத்திலும், இராக்காலத்தின் இறுதிமூர்த்தமாகிய இரண்டுநாழிகையும், பகற்காலத்தின்இறுதிமூர்த்தமாகிய இரண்டுநாழிகையும் ஆகிய இரண்டு சந்தியாகாலத்திலுஞ்செய்தலாகாது. செய்யின் அது இராக்கதருக்

கே பிரீதியாம். அன்னசிராத்தம் அபரான்னத்திற் செய்தல் வேண்டும். ஆமசிராத்தம் சங்கவகாலத்திற்செய்து, அபரான்னத்திற் போசனஞ்செய்தல்வேண்டும். முற்பகலில் தேவகாரியங்களையும், அபரான்னத்திற் பிதிர்சிராத்தத்தையும், மத்தியானத்தில் ஏகோத்திட்டத்தையும், பிராதக்காலத்தில் விருத்திச்சிராத்தத்தையுஞ் செய்தல்வேண்டும்.

சிராத்தமானது நித்தியசிராத்தம் முதலாகப்பலவகைப்படும். நாடோறும் பிதிரரைக்குறித்துச் செய்யப்படும் தருப்பணம் நித்தியசிராத்தம் எனப்படும்.

காஞ்சிப்புராணம்.

சிவஞானயோகிகள்.

வைகறை யெழுந்து கங்கைநீ ராடி
வானவர் முனிவர்தென் புலத்தார்
செய்கட னுவப்பத் தென்புன லிறைத்து
நியாசமுந் தியானமு மாற்றி.

தருப்பணஞ்செய்யுமிடத்து அபசவ்வியமாக உபவீதந்தரித்தவனாய், கைகளில் தருப்பையைக்குறுக்காகப்பிடித்து, அத்தருப்பை மூலத்திலிருந்து, தர்ச்சனி அங்குட்டமூலத்தால்விழும் திலநீரைக்கொண்டு சுவதாந்தமான பிதிர்நாமங்களைச்சொல்லித் திருப்திசெய்க. கவ்வியவாகனர், அனலர், சோமர், யமர், அர்யம்ணர், அக்கினிஷ்வாத்தர், பர்ஹிஷதர், ஆஜ்யபர், சோமர் என்போர் தேவபிதிர்கள் எனப்படுவர். இவர்கள் மகலோகத்துக்குமேலுள்ள சனலோகத்தில் இருப்பார்கள் என மிருகேந்திராகமத்திற் கூறப்பட்டுள்ளது.

கந்தபுராணம்.

மகலோக மிருகோடி மார்க்கண்டாதி
மாமுனிவர் பலர்செறிவர் மற்றதன்மே
லிகலோகம் பரவுசன லோகமெல்லை
யெண்கோடி பிதிர்தேவ ரிருப்பரங்கண்.

ஈசர் முதலியவர்கள் விசேடபிதிரர்கள் எனப்படுவார்கள். அவர்கள் அதற்குமேலுள்ள புவனங்களில் வசிப்பார்

கள். பிதாவின்குலம் மாதாவின்குலம் இரண்டினும் அந்தி யேட்டிமுதலிய கருமஞ்செய்து, ஆசிரியனால் யோசிக்கப்ப டாது நரகத்திலேகிடப்பவர் பிரேதபிதிர்கள் எனப்படுவர். மிருகேந்திரத்திலே "இயமனது சம்யமினி என்னும் பட்ட ணம் உயர்ந்தமதில்கள்சூழ்ந்து, காலபாசம் பிதிர்கள் வியாதி பிரேதகணம் மாரிஎன்னும்ரோகம் இவைகளாற் சூழப்பட்டி ருக்கும்" எனச் சொல்லப்பட்டிருக்கின்றது.

தருப்பண முடிவிலே, என்குலபிதிர்களே! பூமியில் விடப்பட்ட இந்த ஜலத்தினால் நற்கதியையுந் திருப்தியையும் அடையுங்கள் என்றுசொல்லித் தருப்பையை எள்ளுடன் ஜலக்கரையிற்போடவேண்டியது. பிதாமாதாக்கள்முதலாயி னோர் இறந்தமாதமும் திதியும் வருஷந்தோறும் வரும்பொ ழுது விசுவாசத்தோடு விதிப்படிசெய்வது நைமித்தியசிராத் தம் எனப்படும். காரணாகமம் "எத்திதியில் இறந்தனரோ அத்திதியிற் சிராத்தஞ்செய்வது உத்தமம்" எனக்கூறுகின் றது. இவ்வுண்மை உணராதார்சிலர் திதியிற் சிராத்தஞ்செய் வதற்கு ஆகமவிதியில்லையென்றும் நக்ஷத்திரத்திலேயே செய் யவேண்டுமென்றும் திதியிற்செய்வது ஆரியருடைய வழக்க மென்றும் எழுதுகின்றார்கள். அவர்கள் சைவாகமத்திற்கூறி யவாக்கியத்தைக் கண்டிலார்போலும்.

அமாவாசை, சூரியகிரகணம், சந்திரகிரகணம், விதிபாத யோகம், உத்தராயணம், சித்திரைவிஷு, ஐப்பசிவிஷு, மாச ப்பிறப்பு, வைகாசிமாதச்சுக்கிலபக்ஷத்திருதியை, கார்த்திகை மாதச்சுக்கிலபக்ஷநவமி, புரட்டாதிமாதத்துக் கிருஷ்ணபக்ஷ த்திரயோதசி, மாசிமாதத்துஅமாவாசை என்னும் இத்தின ங்களிலே புண்ணியதீர்த்தத்திலே ஸ்நானம்பண்ணி, பிதிர் தருப்பணஞ்செய்து, அதிதிகளோடும் சுற்றத்தாரோடும்போ சனம்பண்ணி, விரதநியமத்துடன் இருத்தல்வேண்டும். இது நித்தியசிராத்தமெனவும், காமியசிராத்தம் எனவும்படும்.

நானஞ்செய்தவருடைய பாவங்களையெல்லாம்நீக்கி அவர்களுக்கு வீடுபேறு உதவுதற்காகவும், புண்ணியகாலங்களிலே தென்புலத்தாரைக்குறித்துத் தருப்பணம் முதலியவற்றைச் செய்யின், அவர்களைப் பிறவியாகியசமுத்திரத்தினின்று கரையேற்றுதற்காகவும் கருணாநிதியாகிய சிவபெருமான் தமது திருவருளையே தீர்த்தவடிவமாக்கி விடுத்தனர்.

## திருவானைக்காப்புராணம்.

இவ்வாறுயர்தீர்த்தத்தருகெய்தித்தவமாதி
செவ்வாய்மையபுரியிற்றிகழ்தானம்பலசெய்யி
னவ்வானருள்பிதிரர்க்குளமமையக்கடனாற்றில்
துவ்வாவமிழ்தனையாய்பயன்சொல்லின்முடியாதால்.

சுத்தசைவராகிய பரஞ்சோதிமுனிவர்பாடிய

## திருவிளையாடற்புராணம்.

[1]மதிகதிரோனிடத்தொடுங்குதினம்[2]திங்கட்பிறப்ப[3]ரவம்வாயங்காந்து
கதிர்கடமைவிழுங்குதினம்[4]விதிபாதமிக்நாளிற்கருதிமூழ்கித்
துதிகடருப்பணந்தானம்புரிதன்மனுவோதுதலத்தொகையொன்றற்
றதிகபலனம்முறையேநூறாயிரநூறாயிரமோரனந்தமாகும். [கொன்

[1 அமாவாசை; 2 மாசப்பிறப்பு; 3 கிரகணபுண்ணியகாலம்; 4 யோகத்திலொன்று.]

[1]மறிதேள்[2]கும்ப[3]மதிகளின்மூழ்கித்தென்பா
லுறைந்தவர்பொருட்டுப்பிண்டமுதவினலவர்தாமாழ்ந்து
நிறைந்திடுபிறவிப்பௌவநின்றுமேலெழுவரன்றே.

[1 சித்திரை; 2 கார்த்திகை; 3 மாசி.]

## மயூரகிரிப்புராணம்.

ஆயகிருச்சிரமிருபத்தைந்துதவும்பெரும்பலன்றானடல்வெஞ்சூரன்
மாயவடிவேல்விடுத்தவானவர்சேனாபதிவாழ்மயூரவெற்பிற்
றூயசரவணநன்னீர்தோய்ந்திடினுற்றிடுமெந்தத்தொல்லைவாவி
நேயமுடன்படிந்துதருப்பணம்புரிந்தோர்க்கனந்தபலனேருமன்றே

புஞ்சவனம், சீமந்தம், சாதகர்மம், நாமகரணம், உபநிஷ்கிரமணம், அன்னப்பிராசனம், கர்ணவேதனம், சௌளம், உபநயனம், விரதம், விவாகம், கிருகாரம்பம், கிருகப்பி

ரவேசம், சாந்திமுதலான சுபகாரியங்களில் முதற்றினத்தி லாவது அத்தினத்திலாவது பிதிர்தேவர்களைக் குறித்துச் செய்வது நாந்தி என்னும் விருத்திச்சிராத்தமாம். இது மங் கலச்சிராத்தமெனவும் கூறப்படும். மோகத்தினால் பிதிர்பூ சையைச் செய்யாது விடுவராயின் நரகத்தில் அமிழ்ந்துவார் கள். இச்சிராத்தம் பிதிருடைய ஆசீர்வாதத்தைப்பெறும் பொருட்டுச் செய்யப்படுவதாம். நாந்திமுகச்சிராத்தவிதி வீரதந்திரம் என்னுஞ் சைவாகமத்திலே விரிவுறக்கூறப்பட்டி ருக்கின்றது. திருவானைக்காப்புராணத்தில் "திருவளருஞ்சுப க்கிரியையனைத்தினுக்கு நாந்திமுகஞ்செய்தல்வேண்டும்" என வருவதுகாண்க. நம்பி என்பான் வள்ளிநாயகியாரைச் சுப்பி ரமணியப்பெருமானுக்குத் தத்தஞ்செய்தபொழுது நாந்திச் சிராத்தமுஞ்செய்தானென்று கச்சியப்பமுனிவர் தணிகைப் புராணத்திற் கூறியிருத்தலினாலும் இச்சிராத்தத்தின் பெரு மை விளங்கும். "மூத்தநூல்வழியாநாந்திமுகமெனுஞ்சிராத் தமோம்பி."

[புஞ்சவனம்-ஆண்மகவுபிறத்தற்குச்செய்யுங்கிரியை. சீமந்த ம்-மூன்றிடத்து விளர்ப்புள்ளபன்றிமுள்ளினால் தலைமயிரை வகிர்ந் துசெய்யுங்கிரியை. சாதகர்மம்-புத்திரோற்பத்தியாயகாலத்துச் செ ய்யுங்கிரியை. நாமகரணம்-பெயரிடுதலிற் செய்யுங்கிரியை. உபநிஷ் கிரமணம்-குழந்தையை எடுத்துக்கொண்டு கோயிலுக்குச் செல்லு தல். கர்ணவேதனம்-காதுகுத்துதலிற் செய்யுங்கிரியை. சௌளம்- மயிர்வினைக்குச்செய்யுங்கிரியை. உபநயனம்-பரமசிவனைத் தரிசிப்ப தற்குச்சமீபமாகிய நயனத்தை உண்டாக்குங்கிரியை. விரதம்-பிரம சரியவிரதத்தையொழித்தற்குச் செய்யுங்கிரியை.]

மனிதர்களுடைய ஒருமாசம் பிதிரர்களுக்கு ஒருதி னமாம். சுக்கிலபக்ஷம் பகலும் கிருஷ்ணபக்ஷம் இரவுமாம். ஆ கையால் மாசந்தோறும்வரும் அமாவாசையில் தவறாது தரு ப்பணஞ்செய்து, விரதசீலராயிருத்தல்வேண்டும். அமாவா சைச்சிராத்தம் அனுட்டித்தார் பெறும்பயனும் பிறவும்

காரணாகமத்திற் சொல்லப்பட்டிருக்கின்றது. பூரணையில் மாதாவைக்குறித்து விரதம் அனுட்டிக்க.

மனுவாதிதினம் கச; மகாளயம் கசு; யுகாதி ச; சங்கிராந்தி கஉ; அமாவாசை கஉ; வியதிபாதம் கந; வைதிருதி கந; அட்டகை கஉ இவை ஷண்ணவதிதினம் என்று சொல்லப்படும். [ஷண்ணவதி-தொண்ணூற்ராறு.] இத்தினங்களில் பிதிர்களுக்குச் சிராத்த தருப்பணங்கள் செய்தல் நன்ராம். புரட்டாதிமாத அபரபக்கஅட்டமியும், ஆவணிஅமாவாசையும், ஆடிமாத பூருவபக்கத்தசமியும், கார்த்திகைமாத சுக்கிலபக்கதுவாதசியும், ஐப்பசிமாத சுக்கிலபக்கநவமியும், ஆனி, பங்குனி, சித்திரை, ஆடி, கார்த்திகை என்னும் மாதங்களிற் பௌர்ணிமையும், மாசிமாதச் சத்தமியும், தைச் சுக்கிலஏகாதசியும், சித்திரை புரட்டாதிமாத சுக்கிலதிருதியையும் பதினான்குமனுவாதி தினங்களாம். புரட்டாதிமாதத்தில் கிருஷ்ணபக்கம்முதல் சுக்கிலபக்கப் பிரதமைவரையுமுள்ள தினங்கள்பதினாறு மகாளயதினங்களாம்.

### சேதுபுராணம்.

அன்னைபிதா மாண்டதினத் தாற்றலிலை யானாலு மறுதியாக
என்னவிலை யானாலு மகாளயமாஞ் சிராத்தவினை யியற்றல்வேண்டும்

கார்த்திகைமாதச் சுக்கிலநவமியும், வைகாசிமாதச் சுக்கிலதிருதியையும், மாசி அமாவாசையும், புரட்டாதிமாதக் கிருஷ்ணபக்கத் திரயோதசியும் நான்குயுகாதிகளாம். தைமாத அபரபக்கச்சத்தமி, அட்டமி, நவமிகளும், பங்குனிமாத அபரசத்தமி, அட்டமி, நவமிகளும், மார்கழிமாத அபரசத்தமி, அட்டமி, நவமிகளும், மாசிமாத அபரசத்தமி, அட்டமி, நவமிகளும் பன்னிரு அட்டகைகளாம். ஷண்ணவதிபிதிர்தினங்கள் **காலாமிர்தம்** என்னும்நூலில் இங்ஙனம் சொல்லப்பட்டன. வேறுநூல்களில் வேறுவிதமாகவுங் கூறப்பட்டுள்ளன.

## திருச்செந்தூர்ப்புராணம்.

"இத்தொகைதொண்ணூற்றாறமிடுஞ்சிராத்த—மனுவினெறிவழிமா
பிற்றென்புலத்தோர்தங்களுக்குவழங்குந்தூயோர்."

கயாசிராத்தஞ்செய்வது பிதிர்களுக்குத் திருப்தியைக்கொடுப்பதாயும், போகமோக்ஷங்களைக் கொடுப்பதாயும் இருக்கின்றது. கயாசிராத்தத்தால் எழுகோத்திரத்துள்ள நூற்றொருகுலமும் விருத்தியாகின்றது. பிதாவின்குலம் இருபத்துநான்கு; மாதாவின்குலம் இருபது; மனைவிகுலம் பதினாறு; சகோதரிகுலம் பன்னிரண்டு; மகள்குலம் பதினொன்று; பிதாவின் சகோதரிகுலம் பத்து; மாதாவின் சகோதரிகுலம் எட்டு ஆகக்குலம் நூற்றொன்றுவருவது காண்க.

அயோத்தி, மதுரை, மாயாபுரி, காசி, காஞ்சி, அவந்தி, துவாரகை என்னும் எழுமுத்தித்தலங்களிலும், திருச்செந்தூர் முதலிய க்ஷேத்திரங்களிலும் சிராத்தகருமஞ்செய்வது மிக்க புண்ணியமாகும்.

பிராமணர் முதலிய மூன்றுவருணத்தாரும் அன்னசிராத்தஞ்செய்க. ஆபத்துக்காலங்களிலும், அக்கினியில்லாதவிடத்தும், கிரகணகாலத்திலும், தீர்த்தயாத்திரை செல்லுமிடத்தும், வேறூருக்குச் சென்றகாலத்தும், ஆமசிராத்தஞ்செய்யக்கடவர். சூத்திரர் என்றும் ஆமசிராத்தமே செய்க.

## ஆசௌசதீபிகை.

அருந்துயர்சேராபத்தாங்காலங்கடனிலு
மக்கினியில்லாவிடத்துங்கிரகணகாலத்தும்
பொருந்துலகிற்றீர்த்தயாத்திரைசெல்லுமிடத்தும்
பூசுரர்முன்மூவர்களும்புகன்றவிதிப்படியே
திருந்துமெழிலாமசிராத்தஞ்செய்யக்கடவர்.

ஆமசிராத்தமுஞ் செய்யமுடியாத பக்ஷத்தில் இயன்ற இரணியத்தைப் பிராமணர்களுக்குக் கொடுக்க.

சிராத்தத்துக்குப் பொருள்இல்லாதவன் காய் கனி கிழங்கு எள்ளுஇவைகளையேனுஞ் சற்பாத்திரப்பிராமணருக்

ருக்கொடுத்துப் பிரதக்கிணநமஸ்காரஞ்செய்து, திலதருப்பணப்பண்ணித் தான் திருப்தியாகப் போசனஞ்செய்தல்வேண்டும். தருப்பணஞ்செய்தற்கும் வலிமைபெறப்படாதாயின் பசுக்கூட்டங்களுக்குப் புல்லைக்கொடுக்க.

## திருச்சேந்தூர்ப்புராணம்.

இடிகொண்மாவிஞற்பிண்டமேயாயினுமிடுக
இல்லையென்றிடிவெள்ளுடன்புனல்கையாலிறைக்க
வல்லவம்பெறு தாயினுமாவினமருந்தப்
புல்லதாயினும்போடுக...............

சிராத்தகருத்தா சிராத்ததினத்திலும், முதற்றினத்திலும், மற்றைத்தினத்திலும், பாரஞ்சுமத்தல், க்ஷெளரஞ்செய்துகொள்ளல், எண்ணெய்தேய்த்துக்கொள்ளுதல், மீண்டு புசித்தல், காமமடைதல், முதலியவற்றைத்தவிர்ந்து விரதசீலனாய் இருத்தல்வேண்டும். விரதநியமந்தப்பியவர் நரகத்தில் விழுந்துவருந்துவர்.

சிராத்தகருத்தா சிராத்தத்தின்பொருட்டு முதனாளாயினும், அன்றைக்காயினும், யோக்கியர்களாகிய பிராமணர்களை அடைந்து வணங்கி, "அடியேன்செய்கின்ற சிராத்தத்தை எற்றுக்கொண்டு அருள்செய்க; யான் இவ்விரதத்தின்வழியில் நிற்பேன்" என்று பிரார்த்தித்து வரித்தல்வேண்டும். தேவர்கள் அருபியாய் அவர்கள்பாற் சேர்ந்துநின்று அச்சிராத்தத்தை எற்று அருள்செய்வர். விசுவதேவர்பொருட்டு இருவரையும், பிதிரர்பொருட்டு மூவரையும் நியமித்தல்வேண்டும். அதிதிஅப்பியாகதர்பொருட்டும் இருவரைநியமிக்க, சிராத்தயோக்கியர் இத்தொகையினர்கிடையாதவிடத்து, விசுவதேவர்கள்பொருட்டு ஒருவரையும், பிதிர்கள்பொருட்டு ஒருவரையும் வரித்தல்வேண்டும். இருவருங்கிடையாதவிடத்து விசுவதேவர்களையும் பிதிர்களையும் கூர்ச்சங்களிலே முறையானே பூசைசெய்து, பிண்டம்இட்டு, இயன்ற தக்கிணையை வேறுஇடத்துள்ள சிராத்தயோக்கியரைக்குறித்துக் கத்தஞ்

செய்தல்வேண்டும். அத் தக்கிணையை அவரிடத்தே தப்பாமற் கொண்டுபோய்க்கொடுத்தல்வேண்டும். அவர் இறந்தால் அவர் புத்திரரிடத்துக் கொடுக்க. புத்திரர்இல்லாவிடின் தேவாலயத்துக்கொடுக்க.

இறந்ததந்தைதாயர் தங்கள்வினைக்கேற்ப உயர்திணையாய்ப்பிறந்தார்களோ, அஃறிணையாய்ப்பிறந்தார்களோ, சுவர்க்கத்தையடைந்தார்களோ, நரகத்தையடைந்தார்களோ, பூமியிலுற்றார்களோ என்றறிந்து மக்கள் நேரே பிதிர்வழிபாடு செய்யவும், இறந்தபிதிர்கள் அதனையறிந்து ஏற்கவும் இயலாதென்பதை ஓர்ந்தே, முற்றறிவும் எல்லாவல்லமையும் உடையராகிய சிவபெருமான் அவ்வழிபாட்டையேற்று இறந்தவர் எப்பிறவியிற்புகுந்தனரோ, அப்பிறவியிற்செலுத்திப் பயனடைவித்தற்பொருட்டுப் பிதிர்தேவரைப் படைத்தனர். அவர்கள் கோபமில்லாதவர்களாயும், எப்பொழுதுஞ் சிவத்தியானமுள்ளவர்களாயும், பிரசித்தர்களாயும், பரிசுத்தர்களாயும் இருக்கின்றார்கள். இறந்தவர்கள் தங்கள் தங்கள் வினைக்கேற்பத் தேவர்களாயிடின் பிதிர்தேவர்கள் சிராத்தவழிபாட்டையேற்று, அவர்களுக்கு அமுதமாக உதவுவார்கள். அசுரராய்ப்பிறந்தால் அவர்கள்புசிக்கும் போகமாக உதவுவர். பசுவாய்ப்பிறந்தால் அதன் உணவுக்கான புல் வைக்கோலாகக் கொடுப்பர். பாம்பாகத்தோன்றின் அதற்கு வாயு ஆகாரமாகச் சேர்ப்பர். அரக்கராகவும் பசாசாகவும் சனித்தால் தசையாகவும் இரத்தமாகவுஞ் செலுத்துவர். மானுடராய்த்தோன்றின் அன்னபானுதிகளாய்உதவுவர். யாம் பிதிர்தேவர்களைப் பூசிக்க அவ்வழிபாட்டையேற்று அப்பிதிர்தேவர்கள் இறந்தவர்களுக்கு உபகரித்தல் எதுபோலும் எனின்; நமது ஊரிலுள்ள ஒருவர் வேற்றூரிற் சென்று வசிக்கும் தமது உறவினனுக்கு அனுப்பும்படி ஈண்டுள்ள தபால்நிலையத்தலைவரிடம் ஈண்டுவழங்கப்பெறும் நாணயமாகக் கொடுக்க, அத்தொகையை ஆண்டுள்ளதலைவர் அங்கேவழங்கப்பெறும் நாணயமாக அவனுக்குக்கொடுத்தல் போலாம்.

சிராத்தத்தில் வரிக்கும்பொழுது பிதிரர்பொருட்டு ஆசாரியரையும், விஸ்வேதேவர்பொருட்டுச் சாதகரையும் வரிக்க. குருவும் சாதகருங்கிடையாதபோது புத்திரனையாவது சமயியையாவது நியமிக்கலாம். பிதிரர்பொருட்டு இறந்தவரின் உயர்ந்த தீக்ஷையுடையவரை அல்லது அவரோடொத்த தீக்ஷிதரைத் தப்பாது வரித்தல்வேண்டும்.

சிராத்தமுதலிய தானங்களை அசற்பாத்திரப் பிராமணருக்குக் கொடுத்தல்கூடாது. பதிசாத்திரங்களை ஓதி அதன்பொருளை அறிந்து, பாவங்களைவிலக்கித் தருமங்களை அநுட்டித்துக் கடவுளை மெய்யன்போடு வழிபடுவோரும், தம்மைப்போலப் பிறரும் பரகதிபெற்று உய்யவேண்டும் என்று கருதி அவருக்கு நன்னெறியைப் போதிப்பவருமாயுள்ளவர் சற்பாத்திரர் எனப்படுவர். பா—பாவமாகியகடலில் அமிழ்ந்தினோர்; திரம்—சிவபெருமானது திருவடிமலராகிய கரையிலிருத்துவன்.

## சிவதருமோத்தரம்.

பாவெனும்பதத்தினர்த்தம்பாவமென்கடலிற்பட்டார்
தேவனற்பதமென்றீரத்திருத்துவான்றிரத்தினர்த்தம்
பாவமென்கடற்பட்டாரைப்பரமர்தம்பதமென்பாரத்
தேவியேயிருத்துவானேபாத்திரமென்னப்பட்டான்.

குருடரும், செவிடரும், ஊமையும், உறுப்புக்குறைந்தவரும், உறுப்புமிகுந்தவரும், கோள்சொல்லுபவரும், பொறாமைகொள்ளுபவரும், குண்டகரும், கோளகரும், பதிசாஸ்திரத்தில் விருப்பமில்லாதவரும், சிவநிந்தை குருநிந்தை சிவனடியார்நிந்தை சிவசாஸ்திரநிந்தைசெய்பவரும், ஆசாரமில்லாதவரும், குரூரரும், வியபிசாரஞ்செய்பவரும், வைத்தியஞ்செய்பவரும், வாணிகஞ்செய்பவரும், வேளாண்மைசெய்பவரும் ஆகிய இவர்களைக்கொண்டு பிதிர்காரியங்களைச்செய்வித்தல் குற்றமாகும். அசற்பாத்திரருக்குக் கொடுத்தவர்கள் பசுமட்கலத்தில்விட்ட நீரைப்போலத் தானபலத்

தையிழந்து, நரகத்தில்விழுந்து வருந்துவர். இவற்றை சுவயம்புவாகமம் காரணாகமம் முதலியவற்றானறிக.

சிராத்தமேற்பவர் நன்று தீது என்றுபேசாது திருப்தியோடும் ஏற்றல்வேண்டும். சில விப்பிரர்கள் தாதா தமக்கு அன்புடன் கொடுத்தபொருளைத் திருப்தியுடன் ஏற்காது அவரோடு முரணுவதைக்காண்கின்றனம். அறிவாளிகள் சிலர் நற்புத்திபுகட்டி இன்சொற்கூறவும், "மூர்க்கனுமுதலையுங்கொண்டதுவிடா" என்றபிரகாரம் தமது பழக்கத்தைவிடாது அதிருப்தியாளர்களாய் ஈனமுறுகின்றார்கள். அன்புடன் கொடுத்தவைகளைத் திருப்தியுடன் ஏற்காதவர்கள் அசற்பாத்திரரேயாம். இவர்கள்,

பெற்றமையு மென்னும் பெரியோரும் பெற்றபொருண்
மற்றமையு மென்றே மகிழ்வேந்து—முற்றியநன்
மானமிலா வில்லாளு மானமுறு வேசியரு
மீன முறுவா ரிவர். என்னும் நீதிவெண்பாவைச்சிந்திப்பார்களாக.

வைதிகருக்குரியபிதிர்தேவர் வசு ருத்திரர் ஆதித்தர் என்போரும், விசுவதேவர் பார்வணத்தில் புரூரவர் ஆர்த்திரவர் என்போரும், சபிண்டீகரணத்தில் காலர் காமர் என்போருமாம். [வசு-சர்வவியாபகர். ருத்ரர்-அன்பரிடர்களைத்தீர்ப்பவர். ஆதித்யர்-ஆதிமூர்த்தி.] புவனேஸ்வரபதங்கொடுக்கும் லோகதர்மிணீசிவதீக்ஷைபெற்றோருக்குப் பிதிர்தேவர் பிரமவிட்டுணுருத்திரர் என்போரும், விசுவதேவர் யமன் அருணன் என்போருமாம். சமயிக்கும் புத்திரகருக்கும் பிதிர்தேவர் கந்தர் சண்டர் கணாதீசர் என்போரும், விசுவதேவர் நந்தியும் மகாகாளருமாம். சமயியாவார் சமயதீக்ஷைபெற்று, சிவாகமம்விதித்தபடி நித்தியகருமத்தைமாத்திரஞ் செய்பவரும், அதனுடன் சிவாலயத்தொண்டையுஞ் செய்பவருமாம். புத்திரகராவார் சமயதீக்ஷையும், விசேஷதீக்ஷையும்பெற்று, ஸ்நானம், தருப்பணம், சிவபூசை, அக்கினிகாரியம், சிவத்தியானம் ஆகியஇவற்றைச்செய்து, அதிதிகளுக்கு அன்னமு

ட்டி ஆசாரியரும் சாதகரும் ஏவியதை அன்புடன்செய்பவர். சாதகருக்கும் ஆசாரியருக்கும் பிதிர்தேவர் ஈசர் சதாசிவர் சாந்தர்என்போரும், விசுவதேவர் (காலாக்கினி) ருத்திரரும் அனந்தருமாம். சாதகராவார் சமயம் விசேடம் நிருவாணம் என்னும் மூன்று தீக்ஷையையும்பெற்று, நித்தியகருமத்தை யும் நைமித்திககருமத்தையும் காமியகருமத்தையும் சிவாகமம் விதித்தபடி பண்ணி, ஆசாரியனைவணங்கி, நிருமலராகிய சிவபெருமானது திருவடிகளில் அன்புபொருந்தித்தன்னோடு சகசமாயுள்ள ஆணவமுதலிய மும்மலங்களையுநீக்குபவர். ஆசாரியராவார் நித்தியம் நைமித்தியம் காமியம்என்னுங்கருமங்களைத் தான் எப்பொழுதுஞ்செய்து, சாதகர், புத்திரகர், சமயிகள்என்னும் மூவகைமாணாக்கரையுங்கொண்டு அவரவர் அதிகாராநுகுணமாகிய கர்மங்களைச் செய்விப்பவர்.

பிதிர்தேவர்களையும் விசுவதேவர்களையுஞ் சிவசத்தியே அதிட்டிக்கும் என அறிந்துகொள்க. பிரமா முதலிய மூவர் லௌகிகதேவர் என்றும், கந்தர் முதல்மூவர் ருத்திரதேவர் என்றும், ஈசர்முதன்மூவர் சிவதேவர் என்றுஞ் சொல்லப்படுவர். சிவசிராத்தஞ்செய்யப்பெற்றோர் சிவபதப்பிராப்தியுறுவர். தாழ்ந்தபதப்பேறு உடையவர்கள் தம்மினுயர்ந்த பதப்பேறுடையாரை வணங்குவது முறையாகும். இவரனைவரையும் பிராகிருதர் வணங்குதல் வேண்டும். இவையனைத்திற்கும் பிரமாணம் **சித்தாந்தசாராவளிவியாக்கியானம், சோமசம்புபத்ததி, கிரணாகமம்** முதலியவற்றுட்காண்க. தண்டிலத்திலே அக்கினியைப்பூசித்துப் பிதிர்நாமங்களால் ஓமஞ்செய்க. விவாகாதிசுபகாரியங்களில் காருகபத்தியாக்கினியும், பிதிர்காரியங்களில் தக்ஷிணாக்கினியும், தேவகாரியங்களில் ஆகவனீயாக்கினியும் பூசிக்கப்படத்தக்கன என்று **பூர்வகாரணத்திற்** கூறப்பட்டிருக்கின்றது. சிவசத்தியிலிருந்து சிவாக்கினி தோன்றியது. சிவாக்கினியின் ஆயிரத்தொருகூறாகக் காருக

பத்தியாக்கினி தோன்றியது. அதன் ஆயிரத்தொருகூறாகத் தக்ஷிணாக்கினிதோன்றியது. அதன் ஆயிரத்தொருகூறாக ஆகவனீயாக்கினி உற்பவித்தது. இதனால் சிவாக்கினியே காருகபத்தியம்முதலிய மூன்றுரூபங்களைப்பொருந்தியது என்பது உணரப்படும். சிவபெருமான் இம்முத்தீவடிவாய் விளங்குகின்றாரென்பது "முத்தன்காண் முத்தீயுமாயினான்காண்" என்னும் அப்பமூர்த்திகள் சிவபுரத்தேவாரத்தான் உணர்க. இம்முத்தீவேள்வியில் அவையாவுந் தம்மிடத்தே பொருந்தியுள்ளனஎன்பதைச் சிவபெருமான் தமது மூன்றுதிருக்கண்களினாலுங் குறித்தருளுகின்றார் அது,

முக்கண னென்பது முத்தீ வேள்வியிற்
றொக்க தென்னிடை யென்பதோர் சுருக்கே.

எனும் பட்டணத்தடிகள் வாக்கான் உணர்க.

சுபகாரியங்களிலும், பிதிர்காரியங்களிலும், தேவகாரியங்களிலும் முறையே மூன்றக்கினிவழிபாடும் நடைபெற்றன என்பது,

ஓதிமிக வந்தணர்க ளெரிமூன் றோம்பு
முயர் புகழார் தருமோ மாம்புலியூர்.

எனத் திருநாவுக்கரசுநாயனாரும்,

ஆங்கெரிமூன்று மமர்ந்துடனிருந்த வங்கையாலாகுதி வேட்டு
மோங்கிய மறையோ ரோமாம் புலியூர்.

எனத் திருஞானசம்பந்தசுவாமிகளும்,

எங்குமிருந்தந்தணர் எரிமூன்றவை யோம்புமிடம்.

எனச் சுந்தரமூர்த்திசுவாமிகளும்,

மூன்றுவகைக்குறித்த முத்தீச்செல்வத்து
இருபிறப்பாளர் பொழுதறிந்துநுவல.

என நக்கீரரும் அருளியவாற்றான் அறியப்படும்.

முதனாளிலே அபரான்னத்தில் வரிக்கப்பட்டவர்களாகிய சிராத்தயோக்கியருக்குப் பூசைசெய்யவேண்டும். விசுவதேவர்களைக் கிழக்குமுகமாகவும் பிதிர்களை வடக்குமுகமாக

ம் அதிதியையும் அப்பியாகதரையும் மேற்குமுகமாகவும் பூசிக்கவேண்டும். [சபிண்டீகரணத்தில் நிமித்தரையும் மேற்குமுகமாகப் பூசிக்கவேண்டும்.] பிதாவை உத்தேசித்துக் கந்தரையும், பிதாமகரை (பிதாவின்தகப்பன்) உத்தேசித்துச் சண்டரையும், பிரபிதாமகரை (பிதாமகரின்தகப்பன்) உத்தேசித்துக் கணநீசரையும் பூசிக்க. மற்றையவற்றுக்கும் இங்ஙனமே கொள்க.

அதிதி அப்பியாகதர்இடத்தில் சதாசிவராகிய விட்டுணுவைப் பூசிக்கஎன்று உத்தரகாரணஞ் செப்புகின்றது. அதிதி அப்பியாகதர்கள் சத்தி சிவவடிவினர் என அறிந்துகொள்க.

பூசைசெய்யுமிடத்து அவரவர்பெயரால் ஆவாகனமும், வாமதேவத்தால் தாபனசன்னிதான சன்னிரோதனமுஞ் செய்க. ஆவாகனம்—பூசையின்பொருட்டு விசுவதேவர் பிதிர்தேவர் முதலியோர்களை வரவழைத்து அபிமுகமாகச்செய்தலாம். எங்கும் வியாபித்திருக்குந் தேவர்களை ஆவாகனஞ் செய்வது எப்படி எனின்; விறகுமுழுதும் நிறைந்திருக்கும் நெருப்பைக்கடைந்து ஓரிடத்திற் பிரகாசிப்பித்தல்போல, எங்கும்நிறைந்திருக்குந் தேவர்களை ஓரிடத்திற் சிரத்தையுடன்அழைத்து அபிமுகமாகச்செய்தல் என்க. தாபனம்—நிலைபெறச்செய்தல்; சன்னிதானம்—பூசிக்கப்படுபவர் அநுக்கிரகஞ்செய்யுந்தன்மையும் பூசகன் அநுக்கிரகப்படுந்தன்மையுமாகிய சமீபித்த சம்பந்தமாம். சந்நிரோதனம்—பூசிப்போனுடைய அறிவு பூசிக்கப்படுவோரிடத்துச் சமைதலாம். வாமதேவத்தால் இரட்சைசெய்க. விசுவதேவருக்கு நெல்லைக்கொண்டு பிரதக்ஷிணமாகச்செய்க. பிதிர்களுக்கு அப்பிரதக்ஷிணமாக எள்ளைக்கொண்டுசெய்க. அகோரத்தால் விசுவதேவர்கட்கு பாதம்முதல் சிரம்வரை நெல்தூவுக. பிதிர்கட்குச் சிரம்முதல் பாதம்வரை எள்ளுத்தூவுக. அப்பியங்கம் கவ

சத்தாற்செய்க. [அப்பியங்கம்—தைலாதிகளைத்தேய்த்து ஸ்நானஞ்செய்தல்.] வஸ்திரத்தை இருதயத்தாலும் உத்தரீயத்தை ஈசானத்தாலுங் கொடுக்க. உபவீதத்தைத் தற்புருஷத்தாலும், சந்தனத்தை அகோரத்தாலும், பவித்திரத்தை வாமதேவத்தாலுங் கொடுக்க. பாதபிரக்ஷாளனம் அஸ்திரத்தாற் செய்க. புஷ்பத்தைச் சத்தியோசாதத்தாற் கொடுக்க. பாத்தியத்தை இருதயத்தாலும், ஆசமனத்தை ஈசானத்தாலும், அருக்கியத்தை மூலத்தாலுங்கொடுக்க. இடத்தைக் கோமயத்தாற் சுத்திசெய்க. அங்ஙனஞ்செய்யாவிடின் பிசாசருக்கே பிரீதியாம்.

## சைவசமயநெறி.

சுத்திபண்ணுத் தானத்திற் சோற்றினிர தங்கொண்டு
துய்க்கும் பிசாசாதி சூழ்ந்து.

விசுவதேவருக்குச் சதுரமாகவும் பிதிர்களுக்கு விருத்தமாகவுஞ் சுத்திசெய்க. வாழையிலையை இடத்தில் நுனி பொருந்தப்போட்டுப் புரோக்ஷித்து, அன்னம், லவணம் (உப்பு), நெய், பால், தயிர், தேன், வியஞ்சனம் முதலியபொருட்களைவைத்து அஸ்திரத்தாற் புரோக்ஷிக்க. ஈசானத்தால் பரிஷேசனஞ்செய்க. மூலமந்திரத்தைஉச்சரித்து அபிமந்திரித்துத் தத்தஞ்செய்க. போசனமானபின் திருப்திபெற்று விகிரமிடுக .உச்சிட்டம் மாற்றுக. [புரோக்ஷணம்-தெளித்தல். பரிஷேசனம்-சுற்றுதல்.] ஆமசிராத்தத்தில் அப்பியங்கம் ஸ்நானம்முதலிய கிரியைகளை அவ்வவற்றுக்குரியமந்திரங்களைச் சொல்லி, அவ்வப்பொருள்களைக்கொடுத்துப் பாவனையாகச் செய்க. ஆமமிட்டுத் திருப்திகேட்க.

அன்னசிராத்தஞ்செய்வோர் அன்னம் திலம் பானீயம் தயிர் பால் நெய் தேன் வாழைப்பழம் என்னும் பொருட்களைச்சேர்த்துக் கந்தர் சண்டர் கணதீசர் என்னும்மந்திரங்களால் சுவதாந்தமாகப் பிதா பிதாமகர் பிரபிதாமகர் மூவரையுமுத்தேசித்துப் பிண்டமிடுக. மாதாவுக்காயின் மாதா

பிதாமகி பிரபிதாமகி இவர்கட்குப் பிண்டமிடுக. ஆமசிராத்தஞ்செய்வோர் திலம் தண்டுலம் உழுந்து ததி (தயிர்) க்ஷீரம் (பால்) தேன் கதளீபலம் நெய் என்னும் பொருட்களைச் சேர்த்துப் பிண்டமிடுக. இவ்வெட்டுப் பொருள்களும் அட்டாங்கம் எனப்படும். அன்னசிராத்தத்தில் ஆமபிண்டம்போடுதலும் ஆமசிராத்தத்தில் அன்னபிண்டம்போடுதலும் குற்றமாம். பிண்டத்தில் பிதிர்தேவருக்கு ஆவாகனாதியான உபசாரங்களைச்செய்து வணங்கி அவர்களது ஆசீர்வாதத்தைப் பெறுக. பின் விசர்ச்சனஞ்செய்து சமஸ்தபிண்டங்களையும் பசுவுக்குக்கொடுக்க. அல்லது நீரிலிடுக. மத்தியபிண்டத்தைச் சற்புத்திரப்பேற்றின்பொருட்டு மனைவிக்குக்கொடுத்தலுமாம்.

பிதாமுதலியோரைக் குறித்துத் தருப்பணஞ்செய்க. பிதிர்பூசை தருப்பணங்களை இடப்புறத்திற்றொங்கும் உபவீதம் உடையவனாய் இடமுழந்தாளை ஊன்றித் தென்றிசையைநோக்கியிருந்து செய்வது முறையாகும். "தென்புலத்தார்க்கு வேண்டுவனசெய்வார் தெற்கும் மேற்கும் நோக்கியும் கருமங்கள் செய்வாராதலின்" என நச்சினார்க்கினியார் தொல்காப்பியஉரைக்கட் கூறியதுங்காண்க.

சிராத்தமுடிவில் குருவுக்கும் மற்றையோருக்கும் தக்ஷிணைகொடுத்து அவரைஉபசரித்து வணங்கி, ஆசீர்வாதம் பெறுக. ஆசாரியர் அவர்கள்தக்ஷிணையை ஆன்மா உய்யுந்திறங்கருதி ஏற்கவேண்டும். கொடுப்பவரும் பிதிர்தேவருக்கென்றே கருதிக்கொடுக்கவேண்டும். அதுவன்றிப் பிராமணருக்கென்றே நினைத்துக்கொடுப்பதனால் நற்கதியடையமாட்டார்கள்.

சிராத்தநடக்கும்போது வேதத்தையும் தேவாரம் திருவாசகம் முதலிய தமிழ்வேதங்களையும், புராணங்களையும், இதிகாசங்களையும், தருமசாஸ்திரங்களையும் படிப்பித்தல்வேண்டும். இது பிதிர்களுக்கு மிகத்திருப்தியாம்.

## திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண்—காந்தாரம்.

தந்தையார் போயினார் தாயரும் போயினார் தாமும் போவார், கொந்தவேல் கொண்டொரு கூற்றத்தார் பார்க்கின்றார் கொண்டுபோவார், எந்தநாள் வாழ்வதற் கேமனம் வைத்தியா லேழை நெஞ்சே, அந்தணா ரூர்தொழு துய்யலா மையல்கொண் டஞ்ச னெஞ்சே.

## திருநாவுக்கரசுநாயனார்.

திருத்தாண்டகம்.

ஐயினான் மிடறடைப்புண் டாக்கை விட்டு
    ஆவியார் போவதுமே யகத்தார் கூடி
மையினாற் கண்ணெழுதி மாலை சூட்டி
    மயானத்தி லிடுவதன்முன் மதியஞ்சூடும்
ஐயனார்க் காளாகி யன்பு மிக்கு
    அகங்குழைந்து மெய்யரும்பி யடிகள்பாதம்
கையினாற் றொழுமடியார் நெஞ்சினுள்ளே
    கன்றாப்பூர் நடுதறியைக் காணலாமே.

எத்தாய ரெத்தந்தை யெச்சுற்றத்தா
    ரெம்மாடு சும்மாடா மேவர் நல்லார்
செத்தால்வந் துதவுவா ரொருவ ரில்லை
    சிறுவிறகாற் றீமூட்டிச் செல்லா நிற்பர்
சித்தாய வேடத்தாய் நீடு பொன்னித்
    திருவானைக் காவுடைய செல்வா வென்றன்
அத்தாவுன் பொற்பாத மடையப் பெற்றா
    லல்லகண்டங் கொண்டடியே னென்செய்கேனே.

தந்தையார் தாயா ருடன் பிறந்தார்
    தாரமார் புத்திரரார் தாந்தா மாரே
வந்தவா றெங்ஙனே போமா றேதோ
    மாயமா மிதற்கேது மகிழ வேண்டாம்
சிந்தையீ ருமக்கொன்று சொல்லக் கேண்மின்
    திகழ்மதியும் வாளரவுந் திளைக்குஞ் சென்னி

எந்தையார் திருநாம நமச்சி வாய
வென்றெழுவார்க் கிருவிசும்பி லிருக்க லாமே.

எண்ணுகே னென்சொல்லி யெண்ணு கேனோ
வெம்பெருமான் றிருவடியே யெண்ணி னல்லால்
கண்ணிலேன் மற்றோர் களைக ணில்லேன்
கழலடியே கைதொழுது காணி னல்லால்
ஒண்ணுளே யொன்பது வாசல் வைத்தா
யொக்க வடைக்கும்போ துணர மாட்டேன்
புண்ணியா வுன்னடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணியனே.

திருக்குறுந்தொகை.

கையி னேடுகால் கட்டி யுமரெலாம்
ஐயன் வீடின னென்பதன் முன்னநீர்
பொய்யி லாவரன் புள்ளிருக்கு வேளூர்
மையு லாவிய கண்டனை வாழ்த்துமே.

## சுந்தரமூர்த்திநாயனார்.

பண்—பழம்பஞ்சுரம்.

ஓவுநாளுணர் வழியுநாளுயிர்
போகுநாளுயர் பாடைமேல்
காவுநாளிவை யென்றலாற்கரு
தேன்கிளர்புனற் காவிரிப்
பாவுதண்புனல் வந்திழிபராஞ்
சோதிபாண்டிக் கொடுமுடி
நாவலாவுனை நான்மறக்கினுஞ்
சொல்லுநாநமச்சிவாயவே.

சிராத்தமுடிந்தபின்பு சிராத்தமேற்பவர்களை வலமா
கப்பின்றொடர்ந்து புறத்தே அனுப்பிவிடுக. சிராத்தஞ்செ
வித்தவராகிய ஆசாரியனையும் உபசரித்து வலமாகப்பின்
டர்ந்து அவர்திருமனைக்கு அனுப்புக. பின்பு சிராத்தஞ்செ

தஇடத்தைச்சுத்திசெய்து தன் கால்கைகளைச்சுத்திபண்ணி, ஆசமனஞ்செய்துகொண்டு சிவனடியார்களோடும் அதிதிக ளோடும் தன் சுற்றத்தார்முதலியவர்களோடுமிருந்து போச னஞ்செய்தல்வேண்டும்.

பிதிர்சிராத்தகாலங்களிலே தபோதனருக்கு அமுது செய்வித்தோர் தம்முடைய இருபத்தொரு சுற்றத்தாரையும் நரகின்கட்கிடந்து வருந்தாமலெடுத்துச் சிவசமீபத்திலேயிரு ப்பர். இதற்குப்பிரமாணம் சிவதருமோத்தரம்:-

விடுத்துல கமலன் றன்னை விரும்பிய விதுலர்க் கன்னங்
கொடுத்தவ ரன்பு கூரப் பிதிர்க்களைக் குறித்த நாளி
லெடுத்தெழு மூன்று சுற்றங் கீழ்க்கிடங் திளையா தென்று
நடத்தொழி னம்பனுட்டி விருத்தியே யிருப்பர் நம்பால்.

சிவயோகிக்குச் செய்யும் பூசையைச் சிவனும் மற்று முள்ளதேவர்களும் பிதிர்களும் தமக்கெனக்கொள்வர்.

சிவதருமோத்தரம்:-

ஒழிவற நிறைந்து நின்ற வொருவனை யுணர்ந்த யோகிக்
கழகுறச் செய்த பூசை யமலனு மயனு மாலு
மெழின்மிகு தேவர் தாமு மெமக்கெனக் கொள்வ ரென்றும்
பிழைகெடப் பிதிர்க டாமு மெமக்கெனக் கொள்வர் பெற்றே.

சிராத்தகாலத்திலே அதிதிகளுக்கு அன்னங்கொடுத் தல் பெரும்புண்ணியமாகும். பரமசிவனும் பார்ப்பதியம்மை யும் முருகக்கடவுளும் விஷ்ணுவும் பிரமாவும் தருமதேவ தையுமாகிய சகலருங்கூடி அதிதிரூபமாய் வருவரென்று அகோரசிவாசாரியர்பத்ததிவியாக்கியானத்திற் கூறப்பட்டிருக் கின்றது. அதிதிபூசை ஐம்பெருவேள்வியின் ஒன்றென்பது முன்னரே கூறப்பட்டது. அது,

இனைத்துணைத் தென்பதொன் றில்லை விருந்தின்
றுணைத்துணை வேள்விப் பயன்.

என்னும் தேவர்வாக்கானும் உணரப்படும்

திருச்செந்தூர்ப்புராணம்:- கொடிக்கினிதூட்டியதிதி யரோடிருந்துணவுதுய்ப்போர் எனவும், சிராத்தத்திலே பிதிரரால் உண்ணப்பட்ட சேஷஅன்னத்தைச் சுற்றத்தாரோடு உண்க என்று காமிகாகமமுஞ் செப்புகின்றன. சுற்றந்தழுவுதலின்சிறப்பைத் திருக்குறள் சுற்றந்தழால் என்னும் அதிகாரத்தானும் உணர்க.

## பெரியபுராணம்.

அரசுகொள் கடன்க ளாற்றி மிகுதிகொண் டறங்கள் பேணிப்
பரவருங் கடவுட் போற்றிக் குரவரும் விருந்தும் பண்பின்
விரவிய கிளையுந் தாங்கி விளங்கிய குடிக ளோங்கி
வரைபுரை மாட நீடி மலர்ந்துள பதிக ளெங்கும்.

போசனம்பண்ணும்பொழுது செய்யத்தகாத குற்றங்கள்:- உண்பதற்கிடையில் உப்பையும் நெய்யையும் படைத்தல், போசனத்துக்கு உபயோகமாகாத வார்த்தைபேசுதல். நாய் பன்றி கோழி காகம் பருந்து கழுகு என்பவைகளையும், புலையர் ஈனசாதியார் விரதபங்கமுடையவர் இருதுமதி என்பவர்களையும் பார்த்தல்முதலியனவாம்.

சைவசமயத்திற்பிறந்தும் சிராத்தஉண்மைகளை அறியாதமாக்கள் சிலர் "செத்தவர் எந்தப்பிறவியிற் புகுந்தனரோ; எங்கேபோயினரோ; அவர்கள்பொருட்டுச் செய்யும் சிராத்தமுதலியவைகளை அவர்கள் எங்ஙனம்ஏற்றுப் பலனடைவர்; பிதிர்கருமஞ்செய்வதாற் பிரயோசனமில்லை" என்றுகூறிப்பிதற்றுவர். அவர்களுக்கே,

உலகத்தா ருண்டென்ப தில்லென்பான் வையத்
தலகையா வைக்கப்படும்.

என்னும் பொய்யாமொழி நன்குபொருந்துவதாம் என்று உணர்ந்துகொள்க. பெரியோர்கள் அவர்கள்கூறுவனபற்றி மயங்கார்கள். ஆயினும் அவரைமகிழ்ந்து அவர்களுடைய வழியிற்செல்லும் மாக்களுமுளர். இவர்கள் தந்தைதாயருக்குக்

தாஞ்செய்யவேண்டிய இன்றியமையாதபிதிரர்வழிபாட்டைச் செய்யாது,

> எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டா முய்வில்லை
> செய்ந்நன்றி கொன்ற மகற்கு.

என்னுந் திருக்குறட்கு இலக்காகின்றனர்.

இதுவரையுங்கூறியவாற்றானே, சிராத்தம்என்பது வேதவழக்கினும் ஆன்றோர்வழக்கினும் நிலைபெற்ற உயர்ந்தவழிபாடு என்பதூஉம், அவ்வழிபாடு புதிதாக ஒருவராற் சிருட்டிக்கப்பட்டதன்று என்பதூஉம், அவ்வழிபாட்டைச்செய்யும்முறை இவைஎன்பதூஉம், அதனைச் சிரத்தையுடன்செய்வது யாவர்க்கும் முக்கியகடமையாம் என்பதூஉம் பிறவும் பெறப்பட்டவாறு கண்டுகொள்க.

சிராத்ததீபிகை முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

---